

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

நான்காம்பத்து

_______________

9-ஆம் திருமொழி - மரவடியை

_______*________

* மரவடியைத்தம்பிக்கு வான்பணையம்வைத்துப்போய்வானோர்வாய *
செருவுடையதிசைக்கருமம் திருத்திவந்துஉலகாண்டதிருமால்கோயில் *
திருவடிதந்திருவுருவும் திருமங்கைமலர்க்கண்ணும்காட்டிநின்று *
உருவுடையமலர்நீலம்காற்றாட்ட ஓ!ச்லிக்கும்ஒளியரங்கமே. (1)

* தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலும்சிதகுரைக்குமேல் *
என்னடியார்அதுசெய்யார் செய்தாரேல்நன்றுசெய்தாரென்பர்போலும் *
மன்னுடையவிபீடணற்கா மதிளிலங்கைத்திசைநோக்கிமலர்க்கண்வைத்த *
என்னுடையதிருவரங்கற்கன்றியும் மற்றொருவர்க்குஆளாவரே? (2)

கருளுடக்யபொழில்மருதும் கதக்களிரும்பிலம்பனையும்கடியமாவும் *
உருளுடையசகடரையும்மல்லரையும் உடையவிட்டுஓசைகேட்டான் *
இருளகற்றும்எறிகதிரோன் மண்டலத்தூடுஏற்றிவைத்துஏணிவாங்கி *
அருள்கொடுத்திட்டுஅடியவரை ஆட்கொள்வானமருமூர்அணியரங்கமே. (3)

பதிராறாமயிரவர் தேவிமார்பணிசெய்ய * துவரையென்னும்
அதில்நாயகராகிவீற்றிருந்த மணவாளர்மன்னுகோயில் *
புதுநாண்மலர்க்கமலம் எம்பெருமான்பொன்வயிற்றிபூவேபோல்வான் *
பொதுநாயகம்பாவித்துஇறுமாந்து பொன்சாய்க்கும்புனலரங்கமே. (4)

ஆமையாய்க்கங்கையாய் ஆழ்கடலாய்அவனியாய்அருவரைகளாய் *
நான்முகனாய்நான்மறையாய் வேள்வியாய்த்தக்கணையாய்த்தானுமானான் *
சேமமுடைநாரதனார் சென்றுசென்றுதுதித்திறைஞ்சக்கிடந்தான்கோயில் *
பூமருவிப்புள்ளினங்கள் புள்ளரையன்புகழ்குழறும்புனலரங்கமே. (5)

மைத்துனன்மார்காதலியைமயிர்முடிப்பித்து அவர்களையேமன்னராக்கி *
உத்தரைதன்செறுவனையும்உய்யக்கொண்ட உயிராளன்உறையும்கோயில் *
பத்தர்களும்பகவர்களும் பழமொழிவாய்முனிவர்களும்பரந்தநாடும் *
சித்தர்களும்தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய்நிற்கின்றதிருவரங்கமே. (6)

குறட்பிரமசாரியாய் மாவலியைக்குறும்பத்க்கிஅரசுவாங்கி *
இறைப்பொசுதில்பாதளம்கலவிருக்கை கொடுத்துகந்தஎம்மான்கோயில் *

எறிப்புடையமணிவரைமேல் இளஞாயிறுஎழுந்தாற்போல்அரவணையின்வாய் *
சிறப்புடையபணங்கள்மிசைச் செழுமணிகள்விட்டெறிக்கும்திருவரங்கமே. (7)

உரம்பற்றிஇரணியனை உகிர்நுதியால்ஒள்ளியமார்புறைக்கவூன்றி *
சிரம்பற்றிமுடியிடியக்கண்பிதுங்க # வாயலரத்தெழித்தான்கோயில் *
உரம்பெற்றமலர்க்கமலம் உலகளந்தசேவடிபோலுயர்ந்துகாட்ட *
வரம்புற்றகதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத்தலைவணக்கும்தண்ணரங்கமே. (8)

தேவுடையமீனமாய்ஆமையாய் ஏனமாய்அரியாய்க்குறளாய் *
மூவுருவிலிராமனாய்க் கண்ணனாய்க்கற்கியாய்முடிப்பன்கோயில் *
சேவலொடுபெடையன்னம் செங்கமலமலரேறிஊசலாடி *
பூவணைமேல்துத்ந்தெழு செம்பொடியாடிவிளையாடும்புனலரங்கமே. (9)

செருவாளும்புள்ளாளன்மண்ணாளன் செருச்செய்யும்நாந்தகமென்னும்
ஒருவாளன் * மறையாளன்ஓடாதபடையாளன் விழுக்கையாளன் *
இரவாளன்பகலாளன்என்னையாளன் ஏழுலகப்பெரும்புரவாளன் *
திருவாளன்இனிதாகத் திருக்கண்கள்வளர்கின்றதிருவரங்கமே. (10)

* கைந்நாகத்திடர்கடிந்த கனலாழிப்படையுடையான்கருதும்கோயில் *
தென்னாடும்வடநாடும்தொழநின்ற திருவரங்கம்திருப்பதியின்மேல் *
மெய்ந்நாவன்மெய்யடியான் விட்டுச்சித்தன்விரித்ததமிழுரைக்கவல்லார் *
எஞ்ஞான்றும்எம்பொருமானிணையடிக்கீழ் இணைபிரியாதிருப்பர்தாமே. (11)

அடிவரவு: மரவடையை தன்னடியார் கருள் பதினாறு ஆமையாய் மைத்துனன்மார் குறள் உரம் தேவு செரு கைந்நாகத்து துப்பு.

# வாயலற் என்றும் பாடம்.